# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

அசல் மனு எண் : 1351/2016/ந

ஆணை எண் : 0001/2017/ந

நாள் : 02/01/2017

திரு. சி.ச. சிபிசக்கரவர்த்தி,
19, மாலைகட்டி தெரு,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம் - 608 001. - முறையீட்டு மனுதாரர்

1. உதவி இயக்குநர்,
   நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்,
   விழுப்புரம் மண்டலம்.

2. உதவி இயக்குநர்,
   நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம்,
   செங்கல்பட்டு மண்டலம்.

3. துணை இயக்குநர்,
   நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம்
   செங்கல்பட்டு மண்டலம். - எதிர் மனுதாரர்கள்

## ஆணை:

மனுதாரரது முறையீட்டு மனு (நாள்:17.12.2016), 26.12.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்:1351/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில் சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணாக சிதம்பரம் நகராட்சியில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன என பொதுவான புகார் எழுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்படி முறையீட்டு மனுவில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2 (11)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "பொதுப் பணியாளர்" என்ற வரையறைக்குள் உட்பட்டவர்கள் அல்ல.

மேற்படி சட்டப் பிரிவின்படி உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை மட்டுமே முறைமன்ற நடுவ விசாரணைக்கு உட்படுத்த முடியும், எனவே, மேற்படி சட்டக் கூறுகளின்படி மனுதாரரது இம்முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/1/2017
செயலாளர்.

பெறுநர்

1. திரு. சி.ச. சிபிசக்கரவர்த்தி,
   19, மாலைகட்டி தெரு,
   சிதம்பரம், கடலூர் மாவட்டம் - 608 001.

2. நகராட்சி ஆணையர்,
   சிதம்பரம் நகராட்சி, கடலூர் மாவட்டம் - 608 001.

5.1.17

5/1/17